மே 26

மனன வசனம்

உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள். வெளி 12:9.

ஆராய்ச்சிக்கு

*வெளி 2:13,24; 2கொரி 11:13-15; சங்கீதம் 146:4; ஆதி 1:1-2:3; வெளி 13:1-17.*

மே 26 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

## பாடம் 9

# கடைசிக்கால வஞ்சகங்கள்



சாத்தான் பரலோகத்திலிருந்து வெளியேற்றப் படச் சற்றுமுன்வரை தூதர்களை வஞ்சிப்பதில்தான் ஈடுபட்டிருந்தான். 'தேவபிரசன்னத்தில் நிற்கும் தன் இடத்திலிருந்து புறப்பட்டுச் சென்று, தூதர்கள் மத்தியில் அதிருப்தியின் ஆவியை லூசிபர் பரவச்செய்தான். நயவஞ்சகமாகச் செயல்பட்டு, தேவன்மேல் பயபக்தி உள்ளவன்போல சிலகாலம் நடித்து, தன்னுடைய உண்மையான நோக்கத்தை மறைத்துக்கொண்டான்; பரலோக ஜீவிகளைக் கட்டுப்படுத்திவந்த பிரமாணங்கள்மேல் அவர்களுக்கு அதிருப்தியைத் தூண்டினான்; அவை தேவையற்ற கட்டுப்பாட்டைச் சுமத்துவதாக மறைமுகமாகக் குறிப்பிட்டான்.' - *EGW, GC, p 495.*

ஏதேனில், சாத்தான் ஒரு சர்ப்பம்போல வேடம் பூண்டு, ஏவாளை தந்திரமாக ஏமாற்றினான். சென்று போன நாட்கள் முதல் இன்றுவரை செய்வதுபோல, தான்நினைத்ததைச்சாதிக்கும்படி ஆயிரவருடங்களின் முடிவுமட்டும் சாத்தான் வஞ்சகத்தைதான் பயன்படுத்துவான். வெளி 20:8.

அவன் நம்மைவிட அறிவாளியாக, சக்தி வாய்ந்தவனாக, கைதேர்ந்தவனாக இருப்பதுதான் வருத்தகரமானது; அதனால்தான் அவனுடைய கண்ணிகளிலிருந்து தப்பிப்பதற்கு நாம் இயேசுவையும் அவருடைய வார்த்தையையும்பற்றிப் பிடிக்கவேண்டும். 'ஆனாலும் உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பற்றிக்கொண்ட நீங்களெல்லாரும் இந்நாள்வரைக்கும் உயிரோடிருக்கிறீர்கள்.' உபா 4:4. இது சொல்கிற நியதி இன்று நமக்கும் நிச்சயம் பொருந்தும்.

பிசாசின் படுசாமர்த்தியமான வஞ்சகங்கள் சிலவற்றைபற்றியும், அவற்றிலிருந்து நம்மை நாம் பாதுகாக்கும் வழிகள்பற்றியும் இந்த வாரம் ஆராய்வோம்.

2018, ஜூன் 2 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

ஞாயிறு, மே 27

## மிகப் பிரமாண்டமான வஞ்சகம்

‘மாபெரும் போராட்டம்’பற்றி முதல் வாரப் பாடத்தில் பார்த்தோம்; அனைத்துலகையும் தாண்டி, அது நம் பூமிக்கு வந்ததுதான் வருத்தகரமானது.

அநேகர், ஏன் கிறிஸ்தவர்களும்கூட, மாபெரும் போராட்டம் ஒன்று நடைபெறுவதை நம்புவதில்லை; ஏனெனில், சாத்தான் ஒருவன் இருப்பதாக அவர்கள் நம்புவதில்லை. உலகத்தில் காணப்படும் தீமையைத்தான் வேதாகமத்தில் சாத்தான் என்று விஞ்ஞான வளர்ச்சிக்கு முந்தைய கலாச்சாரத்தினர் சொல்லியிருப்பாத அவர்கள் நினைக்கிறார்கள். அசாதாரண ஜீவி ஒருவன் மனிதர்கள் மேல் தீயநோக்கத்துடன் இருப்பது என்பது ஒரு விஞ்ஞானப் புனைகதை என்று அநேகர் நினைக்கிறார்கள்.

**பின்வரும் வசனங்களை எல்லாம் வாசியுங்கள். சாத்தான் உண்மையிலேயே இருப்பதுபற்றியும், கடைசிக் கால நிகழ்வுகளில் அவனுக்குள்ள பங்குபற்றியும் அவை என்ன சொல்கின்றன? வெளி 2:13,24; 12:3,7–9,12,17; 13:2; 20:2,7,10.**

இறுதி நாட்களில் பூமியின் குடிமக்கள்மேல் சாத்தான் எவ்வளவாய் அதிகாரம் செலுத்தப்போகிறான் என்பதையும், அவர்களை இரட்சிப்பிலிருந்து வழிவிலக்குவது மாத்திரமின்றி, இயேசுவுக்கு உண்மையாய் இருப்பவர்களை எவ்வளவாய் உபத்திரவப்படுத்தப் போகிறான் என்பதையும் வெளிப்படுத்தல் காட்டுகிறது. சாத்தானுடைய ‘தந்திரங்களில்’ எல்லாம் பெரிய தந்திரம், சாத்தான் என்று ஒருவன் இல்லை என மக்களை நம்பச்செய்வதுதான்; 2கொரி 2:11. தந்திரம் என்பதற்கான கிரேக்க வார்த்தைக்கு ‘மனது’ என்றும் பொருள் உண்டு. சக்திவாய்ந்த எதிரி ஒருவன் இருக்க, அவன் இல்லையென்று நினைப்பவர்கள் எவ்வாறு அவனிடமிருந்து தப்ப நினைப்பார்கள்? கிறிஸ்தவர்களெனச் சொல்லிக்கொள்ளும் அநேகர், பிசாசானவன் இருப்பதை உண்மையென்று நம்பாதது ஆச்சரியத்திற்குரியது. நாம் கடைசிக்காலத்தை நெருங்கிவிட்டோம்; சாத்தான் இவ்வுலகத்தில் பலசூழ்ச்சிகளோடு கிரியைசெய்து வருகிறான்; ஆனால் அதுபற்றிச் சொல்லும் வேத வசனங்களை அவர்கள் புறக்கணிக்கிறார்கள்; அவற்றிற்கு தவறாக அர்த்தம் காண்கிறார்கள். சாத்தான் ஒருவன் இருப்பதை வேதாகமம் ஆணித்தரமாகச் சொல்லியும் அநேகர் அதை மறுக்கிறார்கள். வேதாகமப் போதனைகளைப் புரிந்துவைத்திருப்பது எவ்வளவு முக்கியமானது பாருங்கள்!

குறிப்பாக இந்தக் கடைசி நாட்களில் சாத்தான் பல தந்திரங்களோடு செயல்படுவான் என்று வெளிப்படுத்தல் கூறினாலும், வெளி 12:11 தரும் மிகப்பெரும் நம்பிக்கை என்ன? பிசாசுக்கு எதிராக நமக்கு வல்லமை தரக்கூடிய ஆதாரம் யார்?

## இரண்டு மாபெரும் தவறுகள்

**சாத்தானின் வஞ்சகம்பற்றி பின்வரும் வசனங்கள் என்ன சொல்லுகின்றன?**

*2கொரி 11:13-15* ______________________________

*2தெச 2:9,10* ______________________________

*வெளி 12:9* ______________________________

*வெளி 20:10* ______________________________

கடைசிக்கால வஞ்சகங்கள்குறித்து இயேசு தம்முடைய பிள்ளைகளை எச்சரித்திருக்கிறார் என்று முன்பு ஒரு பாடத்தில் படித்தோம். குறிப்பாக, கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்புவார்களென அவர் எச்சரித்தி ருக்கிறார்; அவர்கள் 'அநேகரை வஞ்சிப்பார்கள்.' மத் 24:5.

கடைசிக்கால கள்ளத்தீர்க்கதரிசிகள், கள்ளக்கிறிஸ்துக்களின் வஞ்சகம் குறித்து எச்சரிப்போடு இருந்தால்மட்டும் போதாது. மாபெரும் போராட்டத்தில் தன்னால் முடிந்த அனைவரையும் வஞ்சிக்க சத்துரு பல சூழ்ச்சிகளை வைத்திருக் கிறான். அந்தச் சூழ்ச்சிகளை கிறிஸ்தவர்கள் அறிந்திருக்கவேண்டும்; வேதாக மத்தை வாசித்து, அதன் போதனைகளுக்குக் கீழ்ப்படிந்தால்தான் அவற்றிலி ருந்து தப்பமுடியும்.

பிரமாண்டமான இரண்டு வஞ்சகங்கள்பற்றி எலன் ஒய்ட் விளக்குகிறார்: 'ஆத்துமா அழிவில்லாதது, ஞாயிற்றுக்கிழமை பரிசுத்தமானது' என்கிற இந்த இரண்டு மாபெரும் தவறுகள் மூலமாக மக்களை சாத்தான் தன் வஞ்சகங்களின் கீழ் கொண்டுவருவான். முதலாவதாகக் கூறப்படுவது ஆவிமார்க்கத்திற்கு அஸ்திவாரமிடுகிறது; பிந்தினது ரோமோடு ஓர் அனுதாபப் பிணைப்பை உண்டாக்குகிறது. ஆவிமார்க்கத்தின் கரத்தைப்பற்றிக்கொள்ள கடல்தாண்டி தங்கள் கைகளை நீட்டுவதில் அமெரிக்காவின் புரொட்டஸ்டண்டுகள்தாம் முதலாவதாக இருப்பார்கள்; ரோம வல்லமையோடு கைகோர்க்க நீண்ட தூரம் கடந்துசெல்வார்கள்; இந்த மும்முனை ஐக்கியத்தின் செல்வாக்கால் மனச்சாட்சி சுதந்திரங்களை காலின்கீழ் போட்டு மிதிப்பதில் இந்த நாடு ரோமைப்போலவே செயல்படும்.' - *GC, p 588.*

எலன் ஒய்ட் இந்த வார்த்தைகளை எழுதி பல வருடங்கள் கடந்துவிட்டன; ஆனால் இந்த 'இரண்டு மாபெரும் தவறுகளும்' இன்றும் கிறிஸ்தவ உலகில் நிலவி வருவதைக் காண்கிறோம்.

இந்தக் கடைசி நாட்களில் வேதாகமச் சத்தியங்களை ஏற்றுக்கொள்வதும், அந்தச் சத்தியங் களுக்குக் கீழ்ப்படிய மனதார இணங்குவதும் எவ்வாறு சாத்தானின் வஞ்சகங்களிலிருந்து தப்புவ தற்கான சக்திவாய்ந்த ஆயுதங்களாக இருக்கின்றன?

______________________________

______________________________

செவ்வாய், மே 29

## ஆத்துமா அழியாமை கோட்பாடு

**மரித்தோரின் நிலைபற்றி, பிர 9:5,6,10; சங் 115:17; சங் 146:4; 1கொரி 15:16-18; தானி 12:2 என்ன சொல்கின்றன? 'இரண்டு மாபெரும் தவறுகளிலிருந்து' நாம் தப்புவதற்கு இந்த வசனங்கள் தரும் பெரிய பாதுகாப்பு என்ன?**

---

சமீப வருடங்களாக ஒரு செய்தி அதிகமாகப் பரவுகிறது; அதாவது 'மரித்தவர்கள்' மீண்டும் சுயநினைவு பெற்று, உயிர்வாழ்கிறார்களாம்; அதாவது, இருதயம் துடிப்பது நின்று, மூச்சுபேச்சில்லாமல் ஆகிறதாம். அவ்வாறு 'மரித்த' நிலையிலிருந்து தங்களுக்கு மீண்டும் சுயநினைவு வந்ததாகச் சொல்லி அநேகர் வியக்க வைக்கிறார்கள். வேறுசிலர், தங்கள் உயிர்பிரிந்து தாங்கள் காற்றில் மிதந்ததாகவும், கீழே தங்கள் சரீரங்களைக் கண்டதாகவும் கூறுகிறார்கள். இன்னும் சிலர், தங்கள் சரீரங்கள் மிதந்துசென்றதாகவும், ஒளியும் அக்கறையுமிக்க ஒரு ஜீவியைச் சந்தித்ததாகவும், அது தங்களுக்கு அன்பு பற்றிய உண்மைகளைப் போதித்ததாகவும் சொல்கிறார்கள். வேறு சிலர் தாங்கள் 'மரித்த' அனுபவத்திற்கு பின், மரித்த தங்கள் உறவினர்களைச் சந்தித்துப் பேசினதாகக் கூறுகிறார்கள்.

'கிட்டத்தட்ட மரணத்தைச் சந்தித்த அனுபவங்கள்' என்று இதற்கு விஞ்ஞானரீதியாக பெயர் சூட்டுமளவிற்கு இது பிரபலமாகியுள்ளது. இதில் உண்மை இல்லை என்றாலும், ஆத்துமா அழிவில்லாதது என்று கூறுவதற்கு இதை ஆதாரமாகக் காட்டுகிற கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள்; மரித்தபிறகு ஆத்துமா வேறொரு நிலைக்குச் சென்று, அங்கே சுயநினைவோடு திரிகிறதாம்.

'கிட்டத்தட்ட மரணத்தைச் சந்தித்த அனுபவம்' என்பது 'இரண்டு மாபெரும் தவறுகளில்' ஒன்றாகும். மரித்ததும் ஆத்துமா வேறொரு நிலையை அடைகிறது என்று நம்புகிறவர், ஆவி மார்க்க வஞ்சகங்களில் சிக்கும் வாய்ப்பு அதிகம்; இந்த வஞ்சகங்கள் ஒருவரை நேரடியாகவோ மறைமுகமாகவோ 'இயேசு எனக்குத் தேவையில்லை' என்கிற நிலைக்குக் கொண்டுசென்றுவிடும். ஆனால், கிட்டத்தட்ட மரணத்தைச் சந்தித்த அனுபவம் ஏற்பட்டதாகச் சொல்கிறவர்கள் தாங்கள் சந்தித்த மரித்த தங்கள் உறவினர்கள் தங்களிடம் அன்பு, சமாதானம், நற்குணம்பற்றிப் பேசி தங்களைத் தேற்றினதாகக் கூறுகிறார்கள்; ஆனால், கிறிஸ்துவுக்குள்ளான இரட்சிப்பு, பாவம், வரவிருக்கும் நியாயத்தீர்ப்புபற்றிப் பேசினதாகச் சொல்வதில்லை. ஆனால், இவைதாம் வேதாகமம் சொல்கிற அடிப்படை சத்தியங்கள். மறுஉலக கிறிஸ்தவ அனுபவத்தை தாங்கள் பெற்றதாகச் சொல்கிறவர்கள், மிகவும் அடிப்படையான கிறிஸ்தவ போதனைகளையும் தாங்கள் அங்குக் கேட்டதாகச் சொன்னால், அது பகுத்தறிவுள்ள பேச்சாக இருக்கும். ஆனாலும், இவர்களது பேச்சு புதுயுகக் கோட்பாட்டாளர்களின் பேச்சுபோல இருக்கிறது; தாங்கள் 'மரித்து' பிழைத்ததாகச் சொன்னாலும், கிறிஸ்தவ அனுபவத்தில் இவர்களுக்கு நாட்டம் ஏற்படுவதில்லை.

---

நம்முடைய புலனுணர்வுகள் நமக்குள் வேறு போதனைகளைப் போதித்தாலும்கூட, கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுடைய வார்த்தை சொல்வதையே முழுவதும் நம்பவேண்டியது ஏன் முக்கியமானது?

## ஓய்வுநாளும் பரிணாமக்கொள்கையும்

'ஆத்துமா அழியாது' என்று சாத்தான் எந்த அளவுக்கு உலகை வஞ்சித்திருக்கிறானோ அந்த அளவுக்கு வேதாகம ஓய்வுநாள் ஞாயிற்றுக்கிழமைக்கு மாறிவிட்டதாகச் சொல்லி வஞ்சித்திருக்கிறான். பாடம் 6, 8.

ஏழாம்நாள் ஓய்வுநாளின் முக்கியத்துவத்தைக் குறைத்துக்காட்டும் 'பரிணாம்' எனும் இன்னொரு வஞ்சகத்தையும் பிசாசு பரப்பிவருகிறான்.

**தேவன் நம் உலகை எவ்வாறு சிருஷ்டித்தார்? இதைச் சிருஷ்டிக்க எத்தனை நாட்கள் எடுத்துக்கொண்டார்? ஆதியாகமம் 1:1–2:3.**

சிருஷ்டிப்புபற்றி இரண்டு உண்மைகள் புலப்படுவதை புரிந்து கொள்ளலாம். **முதலாவது,** எல்லாமே திட்டமிடப்பட்டு நிகழ்ந்தன; எதுவுமே ஏனோதானோவென்று, ஒழுங்கின்றி, எதேச்சையாக நிகழவில்லை. சிருஷ்டிப்பு விபரத்தில் எந்தச் சந்தேகத்திற்கும் வேதாகமம் இடமளிக்கவில்லை. **இரண்டாவது,** ஒவ்வொரு உயிரினத்தையும் தனித்தன்மையுடன் சிருஷ்டித்தார். ஒன்றிலிருந்து அடுத்தது, அதிலிருந்து அடுத்தது என்று உருவாகவில்லை. ஆதியாகமத்தை எழுத்தின்படி பார்க்காதவர்களுக்குக்கூட இந்த இரண்டு உண்மைகளும் தெளிவாகப் புலப்படுகின்றன.

ஆனால், டார்வினுடைய பரிணாமக்கொள்கை இரண்டு விஷயங்களை வலியுறுத்துகின்றன. அதாவது, 'ஒழுங்கு ஏதுமின்றி, பொதுவான இயற்கை கூறிலிருந்து உயிரினங்கள் எல்லாம் உருவாயிற்று' என்கிறது. ஆதியாகமத்தோடு அடிப்படையில் ஒத்துப்போகாத ஒரு கொள்கையை வைத்து ஆதியாகமத்திற்கு அநேகர் விளக்கம் காண்பது ஏனென்று தெரியவில்லை? பரிணாமம் என்கிற பெரும்பிழை மதநம்பிக்கை இல்லாத இலட்சக்கணக்கானோரை மட்டுமல்ல, கிறிஸ்தவர்களெனச் சொல்லிக்கொள்ளும் அநேகரையும்கூட, கிறிஸ்தவ விசுவாசத்தில் அதுவும் ஒன்றென்பதுபோல நம்பச் செய்துள்ளது. ஆனால், வேதாகமப் போதனைக்கு இந்தக் கொள்கை முற்றிலும் முரணாக இருக்கிறது.

மேலும், கடைசிக்கால நிகழ்வுகளின் பின்னணியில் பார்த்தால், பரிணாமக் கருத்துகள் நாம் வஞ்சிக்கப்படும் ஆபத்தை மேலும் அதிகரிக்கின்றன. சுமார் 300 கோடி வருடங்களுக்கு முன்னர் இப்பூமியில் உயிரினம் தோன்றியதாக பரிணாமக் கொள்கை கூறுகிறது. இதை நம்பாமல், 'ஆறு நாட்களில் உலகம் சிருஷ்டிக்கப்பட்டதாகவும், அதில் ஏழாம் நாளை ஒரு நினைவுச்சின்னமாகவும் ஏன் கருதவேண்டும்?' என்று நினைக்கிறார்கள். பரிணாமக் கொள்கையானது ஏழாம் நாளுக்கு முக்கியத்துவம் இல்லாமல் ஆக்குகிறது; ஏனெனில், ஆறு நாள் சிருஷ்டிப்பை ஒரு கட்டுக்கதைபோல அது காட்டுகிறது. அதாவது, ரோமுலஸ், ரீமஸ் என்கிற இரட்டைச் சகோதரர்களை ஓநாய்கள் பாலூட்டி வளர்த்ததாகச் சொல்லப்படும் ஒரு புராணக்கதைபோல இதையும் காட்டுகிறது. உலகம் ஆறுநாளில் சிருஷ்டிக்கப்பட்டது என்று நம்பினால் ஞாயிற்றுக்கிழமையில் ஆராதிக்காமல் ஓய்வுநாளில் ஆராதிக்கவேண்டும்; அது உபத்திரவத்தைக் கொண்டுவரும்; எனவே, உலகம் கோடிக்கணக்கான வருடங்களுக்குமுன் உருவானதாகச் சொல்வதை நம்புவதில் தவறு என்னவென்று நினைக்கிறார்கள்.

**வியாழன், மே 31**

## போலித் திரித்துவம்

தேவனுடைய திரித்துவதன்மைபற்றி வேதாகமம் முழுவதும் உள்ளது. ஆனாலும், கடைசிக்கால வஞ்சகங்கள் பின்னணியில் பார்த்தால், வலுசர்ப்பம்-சமுத்திரத்திலிருந்து எழும்பிய மிருகம்-பூமியிலிருந்து எழும்பிய மிருகம் அடங்கிய போலித் திருத்துவம் ஒன்றுபற்றி வெளி 13 பேசுகிறது.

**வெளி 12:17: 13:1,2 வசனங்களில் விவரிக்கப்படுகிற காட்சி என்ன?**

---

பிதாவானவர் போல, சகலமும் தன்னுடைய கட்டுப்பாட்டில் இருப்பதாக வலுசர்ப்பம் இங்கு தன்னைக் காட்டுகிறான். கிறிஸ்துபோல தன்னைக் காட்டும் சமுத்திரத்திலிருந்து எழும்பின மிருகத்திற்கு இவன் அதிகாரத்தையும் பலத்தையும் சிங்காசனத்தையும் கொடுத்தான். இரண்டாம் வல்லமை எவ்வாறு கிறிஸ்துவைப் போல தன்னைக் காட்டுவதாகக் கருதப்படுகிறது?

**சமுத்திரத்திலிருந்து எழும்பின மிருகத்தின் தன்மைகள் என்ன? வெளி 13:2–5.**

---

பிதாவிடத்திலிருந்து தாம் அதிகாரத்தைப் பெற்றதாக இயேசு சொன்னார் (மத் 28:18); இந்த மிருகம் வலுசர்ப்பத்திடமிருந்து அதிகாரத்தைப் பெறுகிறது. மேலும் இயேசுவைப்போல மரித்து, உயிர்த்தெழுந்த ஒரு காட்சியையும் இந்த மிருகம் எழுப்புகிறது. வெளி 13:3. கூடுதலாக, இந்த மிருகம் 'நாற்பத்திரண்டு மாதம்' அதிகாரம் செலுத்தியதாம்; அதாவது மூன்றரை ஆண்டுகள். தீர்க்கதரிசன கணக்கின்படி இயேசு மூன்றரை வருடங்கள் ஊழியம் செய்ததுபோல, அந்த மிருகம் மூன்றரை வருடங்கள் அதிகாரம் செலுத்துகிறது.

**பூமியிலிருந்து எழுந்த மிருகம்பற்றி வெளி 13:11–17 என்ன சொல்கிறது?**

---

ஆவியானவர் தம்மை மகிமைப்படுத்தாமல், இயேசுவை மகிமைப்படுத்தியதுபோல (யோவான் 16:13,14) பூமியிலிருந்து எழுந்த மிருகமானது சமுத்திரத்திலிருந்து எழும்பின மிருகத்தின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கிறது. மேலும் ஆவியானவர் வல்லமையாகச் செயல்பட்டு வானத்திலிருந்து 'அக்கினி' இறங்கச் செய்ததுபோல (அப் 2:3), பூமியிலிருந்து எழும்பின மிருகமும் செய்கிறது. வெளி 13:13. 'இறுதியில், பெந்தெகொஸ்தே நாள் போன்ற போலியான ஓர் அற்புதத்தை பூமியிலிருந்து எழும்பின மிருகம் செய்கிறது! எதற்காக? போலித்திருத்ததுவம்தான் மெய்யான தேவன் என்று உலகத்திற்கு நிரூபிப்பதற்காக அப்படிச் செய்கிறது.' - யான் பாலியன்.

வேறு என்ன கடைசிக்கால வஞ்சகங்கள் குறித்தும் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்? அந்த வஞ்சகங்களை மற்றவர்களும் அடையாளங்காண எவ்வாறு உதவலாம்?

---

## மேலும் படிக்க:

கடைசிக்கால நிகழ்வுகளின் பின்னணியில், குறிப்பாக ஓய்வுநாளை மனதில் வைத்து, பரிணாமக்கொள்கை ஏற்படுத்தும் விளைவுகளைத் தியானிப்போம். ‘சிருஷ்டிகர் அன்பும் தயாளமும் உள்ளவர் என்றால், ஏன் தீமை காணப்படுகின்றனது’ என்பதை சார்லஸ் டார்வினால் புரிந்துகொள்ளமுடியவில்லை; மாபெரும் போராட்டம்பற்றி அவர் அறிந்திருக்கவில்லை. இதனால், தவறான திசையில் பதில் தேடினார். 1800களின் பிற்பகுதியில் டார்வின் தன் கொள்கை களை மீண்டும்மீண்டும் பரிசீலித்துவந்த சமயத்தில்தான், அந்தக் கொள்கை முன்வைக்கும் அனைத்தையும் எதிர்க்கிற செவந்த்-டே அட்வென்ட்டிஸ்ட் சபையை தேவன் எழுப்பிக்கொண்டிருந்தார்; அது தற்செயல் நிகழ்வு அல்ல. டார்வினின் கொள்கை பரவிய அதே சமயத்தில்தான், தங்கள் பெயரிலேயே சிருஷ்டிப்பை வலியுறுத்தும் செவந்த்-டே அட்வென்ட்டிஸ்ட் சபை வளர்ந்து, பெருகிவந்தது.

வான்அமைப்பில் பூமி மையத்தில் இருக்கிறது என்றும், உயிரற்ற பொருட்களிலிருந்து உயிரினங்கள் உருவாயின என்றும் முதலில் மக்கள் நம்பிவந்தார்கள்; அதைத் தொடர்ந்து மேலும் ஒரு மிகப்பெரிய தவறான கொள்கையை டார்வின் புகுத்தினார். பின்வரும் எலன்ஒய்ட்டின் கருத்துகளை அவர் வாசித்து, நம்பியிருந்தால், அந்தத் தவற்றைச் செய்திருக்கமாட் டார்: ‘பாவ சாபக்கேட்டிற்கு பூமி ஆளான போதிலும், மனிதன் கற்றுக்கொள்ளும் புத்தகமாக இன்னும் இயற்கை திகழ்ந்துவந்தது. தற்சமயம் நன்மையைமட்டுமே காட்டமுடியாத நிலைக்குள்ளானது; ஏனென்றால், எங்கும் தீமை நிலவியது; அதன் கேடு பூமியையும் சமுத்திரத்தையும் ஆகாயத்தையும் கெடுத்திருந்தது. தேவனுடைய குணமான நன்மை அறியத்தக்க தன்மை மட்டுமே இருந்த இடத்தில், இப்போது சாத்தானுடைய குணமான தீமை அறியத்தக்க தன்மையும் இருந்தது. இப்போது நன்மை தீமை அறியத்தக்க தன்மையை வெளிப்படுத்தி வந்த இயற்கையிலிருந்து பாவத்தின் விளைவுகள்குறித்து மனிதன் நித்தமும் எச்சரிப்பு பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.’ – *Education, p 26.*

விழுந்துபோன இந்த உலகத்தையும், தேவனுடைய குணத்தையும், படைப்பையும்பற்றி தவறாகப் புரிந்துகொண்டு, டார்வின் தன் பரிணாம ஊகங்களை வடிவமைத்தார். இந்தக் கொள்கையின் விளைவுகளால் மக்கள் சாத்தானுடைய வஞ்சகங்களுக்கு இரையாகப் போகிறார்கள் என்பதுதான் வருத்தமானது.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *சாத்தான் உண்மையிலேயே இருப்பதை கிறிஸ்தவர்கள் பலர் மறுப்பது ஏன்? வேதாகமத்தின் தெளிவான போதனைகளைப் புறக்கணிப்பது எவ்வளவு ஆபத்தில் முடியுமென இதிலிருந்து என்ன தெரிகிறது?*

2. *‘கிட்டத்தட்ட மரணத்தைச் சந்தித்த அனுபவம் எனக்கு உண்டானது, எனவே மரணத்திற்கு பிறகும் நமக்கு வாழ்க்கை இருக்கிறது’ என்று சொல்லும் ஒருவருக்கு உங்கள் பதில் என்ன?*

3. *பரிணாமக்கொள்கையை நம்புகிறவர் கடைசிக்கால வஞ்சகங்களில் சிக்குவது மிகவும் எளிது என்பதற்கு வேறு என்ன காரணங்களை நீங்கள் சொல்லமுடியும்?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,
டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. YOUTUBE க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. YOUTUBE க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,
ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*